[24th March 1960

SRI T. S. RAMASWAMI : May I know how long are these cases under investigation and whether any stay was given in between, if so by whom and for what reasons?

THE HON. SRI R. VENKATARAMAN : This was under investigation since 1959. I think in one case one of the Presidents of the Society made representations that there were some facts and circumstances which the Government should take into account. Naturally when representations are made, a stay is given and the representation is examined. After that, I may tell the hon. Member that the stay has been cancelled.

Artificial Rain-making

* 549 *Q.*—SRI K. SATTANATHA KARAYALAR : Will the Hon. the Minister for Home be pleased to state the number of attempts made in Artificial Rain-making and the number of times they were successful during 1959?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : During the year 1959, trials on Artificial Rain-making in Coimbatore Region were made on 143 days. On review of the trial up to 30th September 1959, they were found to be successful on 18 days.

SRI K. SATTANATHA KARAYALAR : சாதாரணமாக இதற்கு எவ்வளவு செலவாகிறது ? ஒரு அட்டம்ப்ட் செய்வது என்றால் அதற்கு என்ன செலவாகிறது ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : மொத்தமாக இது 5,000 ரூபாய் சாங்ஷன் செய்யப்பட்டது. சொற்ப செலவில்தான் இந்த பரிசோதனை செய்யப்பட்டு வருகின்றது.

SRI A. GOVINDASAMY : இந்த பரிசோதனை கோயம்புத்தூர் ஜில்லாவில் மட்டும் தான் நடந்து வருவதாக தெரிகிறது ? ஏன் மற்ற ஜில்லாக்களிலும் இந்தப் பரிசோதனை நடத்தவில்லை. மற்ற ஜில்லாக்களில் எல்லாம் நடத்தினால் வெற்றி பெறாது என்பது சர்க்காருடைய கருத்தா என்பதை அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : மற்ற மாவட்டங்களிலும் பரிசோதனை செய்யப்பட்டு வருகிறது.

SRI V. SANKARAN : செயற்கையாக கண்களில் நீர்த்துளிகள் நொடிப்பொழுதில் வரவழைப்பதில் ஆண்களை விட பெண்களுக்கு திறமை இருக்கிறது என்பதை சர்க்கார் உணர்ந்திருக்கிறதா ? அப்படியானால் பெண்களையே இந்த பரிசோதனையில் ஈடுபடுத்த சர்க்கார் முன் வருமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: இது விஞ்ஞான விஷயம். இதில் ஆண்கள் பெண்கள் என்ற வித்தியாசம் பார்ப்பதற்கில்லை.

SRI A. VEDARATHNAM : செயற்கையான மழை பெய்விப்பதற்கு நடத்தப்படும் பரிசோதனை திருப்திகரமாக இருக்குமானால், ஏன் அதை மீண்டும் மழையில்லாத பிரதேசங்களில் பரிசோதனை செய்து பார்க்கக்கூடாது ? அதற்கு அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : செயற்கையின் மழையின் ஆராய்ச்சி இன்னும் முடிவு பெறவில்லை. இங்கு மட்டுமல்ல.

உலகத்தில் எந்த நாட்டிலும்கூட இந்த ஆராய்ச்சி முடிவு பெற்றிருப்பதாகத் தெரியவில்லை. இந்த ஆராய்ச்சியை நம் அரசாங்கம் கைவிட்டு விடவில்லை. மேலும் ஆராய்ச்சி நடந்து கொண்டிருக்கிறது.

SRI P. G. KARUTHIRUMAN : சபா நாயகர் அவர்களே, வெறும் கண்ணீர்த் துளிகளினால் மட்டும் மழை வந்து விடாது என்பது அரசாங்கத்துக்கு தெரியுமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : சிறு துளிபெரு வெள்ளம் ஆகலாம் என்பது எல்லோரும் அறிந்த விஷயமே.

Grievances of hospital employees

* 550 *Q.*—SRI P. S. SANTHANAM : கனம் கைத்தொழில் அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்கு பதிலளிப்பாரா—

வேலூரில் நடைபெறும் சி. எம். சி. ஆஸ்பத்திரியில் வேலை செய்யும் தொழிலாளர்கள், வாராந்திர விடுமுறைக் கோரியும், 8–மணி நேரம் வேலைக் கோரியும் கைத்தொழில் அமைச்சர் அவர்களிடம் மகஜர் அளித்துள்ளதின் பேரில் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது ?

THE HON. SRI R. VENKATARAMAN : The employees of the Christian Medical College Hospital, Vellore, excepting those working in the automobile workshop attached to the hospital, are not covered by the Factories Act or the Madras Shops and Establishments Act. No direction can, therefore, be issued for restricting the working hours of the workers to 8 hours per day for the grant of a weekly holiday.

SRI M. P. SARATHI : ஸார், இதற்காக சி. எம். சி. ஆஸ்பத்திரி தொழிலாளர்கள் ஒரு சங்கம் ஏற்படுத்திக்கொண்டு அதை அங்கீகரிக்க வேண்டும் என்று கேட்டபோது அதை அங்கீகரிக்க மாட்டோம் என்று சொல்லிவிட்டதாக தெரிகிறது. அதோடு அவர்கள் கேட்கும் கோரிக்கைகளை ஆஸ்பத்திரி அதிகாரிகளும் கொடுக்காமல் இருந்து வருவது சர்க்காருக்குத் தெரியுமா ?

THE HON. SRI R. VENKATARAMAN : இப்போது இருக்கின்ற சட்டப்படி தொழிலாளர்கள் சங்கங்களைக் கட்டாயமாக அங்கீகரிக்க வேண்டும் என்ற நிர்பந்தம் இல்லை. அவர்கள் அங்கீகரிக்கவில்லை என்றால் சர்க்கார் அதில் ஒன்றும் செய்வதற்கு இல்லை.

SRI S. PAKKIRISAMI PILLAI : தொழிலாளர் சட்ட விதிகளிலிருந்து இந்த ஆஸ்பத்திரிக்கு தனியாக ஏதாவது விதிவிலக்கு கொடுக்கப்பட்டிருக்கிறதா ? அப்படியானால் என்ன காரணம் ?

THE HON. SRI R. VENKATARAMAN : சாதாரணமாக ஆஸ்பத்திரிகளிலுள்ள தொழிலாளர்கள் பாக்டரி சட்டத்தின் கீழோ அல்லது ஷாப் சட்டத்தின் கீழோ வருவதில்லை.

SRI A. GOVINDASAMY : மற்ற சலுகைகள் ஒன்றும் காண்பிக்க முடியவில்லை யென்றாலும், எட்டு மணி நேரத்திற்கு மேல் வேலை செய்யும் இவர்களை பாதுகாக்க அரசாங்கம் ஏதாவது நடவடிக்கை எடுக்குமா ?

THE HON. SRI R. VENKATARAMAN : இதில் அரசாங்கம் ஒன்றும் செய்வதற்கில்லை. சர்க்கார் இலாகாவாக இருந்தால் ஏதாவது வசதி செய்து கொடுக்க முடியும். அதுவுமில்லை. பாக்டரி சட்டத்தின் கீழும் வரவில்லை. ஆகவே, அரசாங்கம் இதில் ஒன்றும் செய்வதற்கில்லை.